முருகப்பெருமான் துணை

**மகான் ஆனாய நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**11.04.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. தரணியை காக்க அவதரித்த
தவசியே அரங்கா வாழ்க
வரமென நீ அருளும் ஞானமே
வையகம் மீட்குமெனக் கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறைவிலா சார்வரி சேல்திங்கள்
இருபான் நவ திகதி கதிர் வாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 29ம் நாள், 11.04.2021 ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் ஆனாய நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்ஞானி அரங்கன் திருவடி
ஞானமாக மக்களை மீட்க
நம்பிக்கை வைத்து தீட்சை ஏற்க
4. ஏற்கவே வினைகள் விலகும்
இன்னலிலா வாழ்வு காணும்
அற்புதமான தரும வழிகளை
அன்னதான சேவை ஆக்கி அருள
5. அருளமுது உண்டு உலகோர்
அரங்கன் தருமமதை வளர்க்க
பேருலகம் எங்கும் பரவிட
பெருமை மிக்க புண்ணியபலமாகி
6. ஆகியே சுமையான இடர்கள்
ஆபத்துக்கள் பேரழிவுகளெல்லாம்
அகிலத்தை அனுகா பாதுகாப்பு பெறும்
அருட்தயவான சிந்தை பெருக
7. பெருகவே மக்களிடை தெளிவும்
பெரும்பகை பிரச்சினைகளுமிலா
தரும நோக்கம் உயர்வும்
தன்னலமிலா செயல்பாடுகளும் கூடி
8. கூடியே மக்களிடை மாண்புகள்
குருவருளாகவே மாற்றம் பெறும்
தேடியே எளியவர்க்கு உதவும்
திருவருளாகவும் மாற்றம் பெறும்
9. மாற்றம்தரும் மகா ஞானியே
மரணம் வெல்லும் யோகியே
ஆற்றல்பட உன் தயவை
அருள் தீட்சையை பெற்ற மக்களுக்கு

10. மக்களுக்கு நன்மை கூடும்
மறுமைத் துன்பம் ஓடும்
ஆக்கமான ஞான சித்தியும்
அறிவு கீர்த்தியும் மேன்மையும் கூடும்

11. கூடவே அரங்கன் வழியில்
குவலயத்தாரே நாடி வாரீர்
ஈடேறி பெரும் பேறடைவீர்
இயம்பிய யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—